பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
23 06 2025 **MONDAY 6.30 PM**
மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சுரங்கத்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டின் வளர்ச்சிக்கான உந்துசக்தியாக தொழில்நுட்பம் திகழ்கிறது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- நோய் தடுப்பு குறித்து பள்ளி மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் 55 ஐ ஏ எஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
- Seychelles சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியா மூன்று தங்கம், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

சுரங்கத்துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக, சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

சுரங்க ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டிருப்பதாக அந்த கட்டுரையில் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

கூட்டாட்சி தத்துவத்திற்கு வலுசேர்க்கும் வகையில் மாநில அரசுகளோடு இணைந்து, தமது துறை செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சிக்கான உந்துசக்தியாக தொழில்நுட்பம் திகழ்கிறது என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது துறையின் 11 ஆண்டு சாதனைகள் குறித்து எடுத்துரைத்தார்.

2014-ஆம் ஆண்டு உயிரி தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்கள் 50 மட்டுமே செயல்பாட்டில் இருந்ததாக தெரிவித்தார்.

தற்போது இதன் எண்ணிக்கை 10 ஆயிரத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

புதிய இந்தியாவை உருவாக்குவதில் நிர்வாக சீர்திருத்தங்கள், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவியல் துறை முக்கிய பங்கு வகிப்பதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அரசு நிர்வாகத்தை செம்மைப்படுத்துவதில் பேரவையின் மதிப்பீட்டுக்குழுக்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளின் மதிப்பீட்டுக்குழுக்கள் பங்கேற்ற இரண்டு நாள் தேசிய மாநாட்டை இன்று மும்பையில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொள்வதிலும் இக்குழுக்கள் முக்கிய பங்கு வகிப்பதாக திரு ஓம். பிர்லா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நோய் தடுப்பு குறித்து பள்ளி மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இத்திட்டத்தை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*('Sound Byte - மா.சு – 43 'Sec.)*

<<<<<<>>>>>>

தமிழகத்தில் 55 ஐ ஏ எஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, உயர்கல்வித்துறை செயலாளராக திரு சங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் கூடுதல் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் டாக்டர் உமா சிறப்பு திட்ட செயலாக்கத்துறையின் கூடுதல் செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் திருமதி சங்கீதா, சமூக நலத்துறை இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மதுரையில் நடைபெற்ற முருகபக்தர்கள் மாநாட்டில் ஐந்து லட்சம் பேர் பங்கேற்றதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிறு அசம்பாவிதமும் இன்றி இந்த மாநாடு நடைபெற்றதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தாய்மொழி பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஆர் எஸ் எஸ் தலைவர் திரு மோகன் பகவத் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கோவையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வேளாண் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் என்றார்.

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பயன்படுத்துவதற்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் பங்களிக்க வேண்டும் என்றும், திரு மோகன் பகவத் கூறினார்.

<<<<<<>>>>>>

தேர்தல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு பயிற்சிகள் அவசியமாகிறது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கான பயிற்சி முகாமை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி, தேர்தல்கள் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரிப்புப்பணிகள் முறையாக நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு இந்த பயிற்சி அளிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் இந்தியாவில்தான் தேர்தல்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்பட்டு வருவதாகவும் திரு கியானேஷ்குமார் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*Sound Byte - செந்தாமரை கண்ணன் - 51 Sec.)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாவட்டம் செட்டிக்குளம் ஊராட்சியில் புதிய சமுதாயக்கூடத்தினை வணிகவரித்துறை அமைச்சர் திரு மூர்த்தி இன்று திறந்துவைத்தார்.

-------------------

அரியலூர் மாவட்டம் செந்துரையில் நான்கு கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி அழகுமீனா அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

------------

பெரம்பலூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற விண்ணப்பித்தவருக்கு 15 நிமிடத்தில் அதற்கான அடையாள அட்டையை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் வழங்கினார்.

--------------------

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பொதுமக்களுக்காக மனுக்கள் எழுதி கொடுப்பவர்களின் குறைகளை ஆட்சியர் திரு சரவணன் கேட்டறிந்தார்.

----------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் தேசிய மாணவர் படை சார்பில் போதைப்பொருள் தீமை குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

Seychelles சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியா மூன்று தங்கம், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

Mahe–ல் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவில் Himanshu Sharma–வும், 55 கிலோ எடைப்பிரிவில் Ashish Mudshaniya –வும், 90 கிலோ எடைப்பிரிவில் Gaurau Chauhan –னும் தங்கப்பதக்கம் வென்றனர்.

60 கிலோ எடைப்பிரிவில் Anmol-லும், 65 கிலோ எடைப்பிரிவில் Aditya Yadav-வும், 75 கிலோ எடைப்பிரிவில் நீரஜ்ஜும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

70 கிலோ எடைப்பிரிவில் Kardik Dalal வெண்கலப்பதக்கம் வென்றார்.

----------------

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Aditya Dileep Jadhav மற்றும் Hardeep இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 48 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Aditya Dileep Jadhav 12-4 என்ற புள்ளிக்கணக்கில் கிரிகிஸ்தானின் Abdullaaziz Oibekovich Mominov –ஐ வென்றார்.

110 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Hardeep 7-3 என்ற புள்ளிக்கணக்கில் கிர்கிஸ்தானின் Umar Ormanov –வை வென்றார்.

------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் ஆசியகோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா 13-0 என்ற கோல் கணக்கில் மங்கோலியாவை வென்றது.

Pyari Xaxa ஐந்து கோல் அடித்தார்.

----------

உஸ்பெகிஸ்தான் செஸ் கோப்பைக்கான போட்டியின் நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா நான்காவது இடத்தில் உள்ளார்.

Tashkant-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இதுவரை அவர் மூன்று புள்ளிகளை பெற்றுள்ளார்.

------------

ஆசிய ஸ்குவாஷ் இரட்டையர் சாம்பியன் போட்டி இன்று மலேசியாவில் தொடங்கியது.

----------

ஒலிம்பிக் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

--------------

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று உணவு இடைவேளையின்போது இந்தியா இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 153 ரன் எடுத்துள்ளது

'Leeds' –ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் கே எல் ராகுல் 72 ரன்னுடனும், ரிஷப் பந்த 31 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

<<<<<<END>>>>>>